www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

சேலம் மாவட்டம்

FRS

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

**10 - ஆம் வகுப்பு**

## தமிழ்

காலம் : 3.00 மணி | மதிப்பெண்கள் : 100

### பகுதி - I

**சரியான விடையளி :-** 15 X 1 = 15

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே ................
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்
2. 'பாடுதமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல் இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
3. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
4. உனதருளே பார்ப்பன் அடியேனே - யாரிடம் யார் கூறியது? அ) குலசேகராழ்வாரிடம் இறைவன்
ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார் இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
5. "இங்கு நகரப்பேருந்து நிற்குமா"? என்று வழிப்போக்கர் கேட்பது .......... வினா. "அதோ அங்கு நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது .......... விடை. அ) ஐயவினா. வினா எதிர்வினாதல்
ஆ) அறிவினா மறைவிடை இ) அறியாவினா. சுட்டுவிடை ஈ) கொளல்வினா. இனமொழி விடை
6. 'சதாவதானம்' என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்
அ) பாரதியார் ஆ) கம்பர் இ) செய்குதம்பிப்பாவலர் ஈ) பரஞ்சோதி முனிவர்
7. கோசலநாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால் இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
8. இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப்போரிடுவதன் காரணம்
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல். இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
9. இரப்போர்க்கு ஈயாது வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கூறும் நூல் ........ .
அ) புறநானூறு ஆ) சிறுபாணாற்றுப்படை இ) கலித்தொகை ஈ) நற்றிணை
10. "வீட்டைத் துடைத்துச்சாயம் அடித்தல்" இவ்வடி குறிப்பிடுவது.
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
11. மார்கழி, தை என்பன அ) கார்காலம் ஆ) குளிர்காலம் இ) முன்பனிக்காலம் ஈ) பின்பனிக்காலம்

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*வண்ணமும் சுண்ணமும் தண் நறுஞ் சாந்தமும்*
*பூவும் புகையும் மேலிய விரையும்*
*பகர்வனர் திரிதரு நகர வீதியும்*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்*

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) காலக்கணிதம் ஈ) புறநானூறு
13. 'வண்ணமும் சுண்ணமும்' என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) எண்ணும்மை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) வினைத்தொகை
14. 'காருகர்' என்பதன் பொருள் அ) ஓவியர் ஆ) ஆசிரியர் இ) நெய்பவர் ஈ) மருத்துவர்
15. இப்பாடலின் ஆசிரியர் அ) கம்பர் ஆ) பாரதியார் இ) கண்ணதாசன் ஈ) இளங்கோவடிகள்

### பகுதி - II பிரிவு - I

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும் :-** 4 X 2 = 8

16. இறடிப் பொம்மல் பெறுகுவிர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
17. குறிப்பு வரைக - அவையம்.
18. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாரும் கீழ் - *இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.*
19. **விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**
அ) காந்தியடிகள் நாட்டு விடுதலைக்காக அறவழியில் போராடினார்.
ஆ) கீழடி அகழாராய்ச்சி மூலம் தமிழரின் தொன்மைக்காலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
20. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
21. 'வினை' என முடியும் குறளை எழுதுக.

### பிரிவு - II

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் :-** 5 X 2 = 10

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை எழுதுக. அ) கீரி பாம்பு ஆ) முத்துப்பல்
23. 'அமர்ந்தான்' பகுபத உறுப்பிலக்கணம் தருக.
24. இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக. அ) சிறு - சீறு ஆ) விடு - வீடு
25. பழமொழிகளை நிறைவு செய்க. அ) ஒரு பானை ............ ஆ) உப்பிட்ட வரை ................. .
26. கலைச்சொல் தருக. அ) Casmic rays - ஆ) Intellectual -
27. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
28. **தொடரை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**
அ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள். ***(கலவைச் சொற்றொடராக மாற்றுக)***
ஆ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. ***(தனிச் சொற்றொடராக்குக)***



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## பகுதி - III பிரிவு - 1

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் :- 2 X 3 = 6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
அறம் கூறும் மன்றாங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு உறையூரிலிருந்த 'அற அவையம்' தனிச்சிறப்பு பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.
அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை? ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?
இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?

30. "புளியங்கன்று அழகாக நடப்பட்டுள்ளது" இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

31. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

## பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும் :- 2 X 3 = 6

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. முதல்மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

34. 'மாற்றம்' எனத்தொடங்கும் காலக்கணிதப்பாடலை எழுதுக. *(அல்லது)*
'சிறுதாம்பு' எனத்தொடங்கும் முல்லைப்பாட்டை எழுதுக.

## பிரிவு - 3

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும் :- 2 X 3 = 6

சேலம் மாவட்டம்

35. *கண்ணே கண்ணுறங்கு*
*காலையில் நீயெழும்பு*
*மாமழை பெய்கையிலே*
*மாம்பூவே கண்ணுறங்கு*
*பாடினேன் தாலாட்டு*
*ஆடி ஆடி ஓய்ந்துறங்கு* - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.


37. வேலோடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலோடு நின்றான் இரவு - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் :- 5 X 5 = 25

38. அ) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக. **(அல்லது)**
ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) மென்திறன் பேசியால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்து உன் சகோதரிக்கு மடல் ஒன்று எழுதுக. **(அல்லது)**
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு விலை கூடுதலாகவும், தரமற்றதாகவும் இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு புகார் விண்ணப்பம் ஒன்று எழுதுக.



40. காட்சியைக் கண்டு கவினுறு எழுதுக.
புத்தகம் (பக்கம் எண் : 125இல் காட்சி)

41. வீட்டு எண் : 48, கவிமணி தெரு, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த தமிழரசனின் மகன் இனியன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை இனியனாகப் பாவித்து உரிய படிவத்தைத் தேர்ந்தெடுத்து மேல்நிலை வகுப்புச்சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என எழுதுக. *(அல்லது)*
ஆ) மொழிபெயர்க்க.
1. Education is what remains after one has forgolton what one has learned in School - Albert Einstein.
2. Tomorrow is often the busiest day of the week - Spanish Proverb.
3. It is during our darkest moments that we must focus to see the light - Aristotle.
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts - Winston Churchill.

மாற்று வினா (மாற்றுத் திறனாளிக்கானது)
ஊர்பெயர்களின் மரூஉவை எழுதுக.
1. உதகமண்டலம் 2. நாகப்பட்டினம் 3. புதுச்சேரி 4. கும்பகோணம் 5. மயிலாப்பூர்

## பகுதி - V (மதிப்பெண் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும் :- 3 X 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. *(அல்லது)* ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44. அ) கு. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. *(அல்லது)* ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) கட்டுரை எழுதுக. 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' *(அல்லது)*
குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.
முன்னுரை - உலகை மிரட்டும் கொடியநோய்கள் - கொரோனா - பாதுகாக்கும் வழிமுறைகள் - தடுப்பூசியின் இன்றியமையாமை - முன்களப் பணியாளர்கள் -அரசின் சாதனைகள் - மீண்டும் வராமல் தடுக்கும் வழிவகை - நம் கடமை நம் உயிர் - முடிவுரை.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com